**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 87/2021**

**வாதி தரப்பு சாட்சி-1 தங்கராஜ் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>:**

1) நான் இவ்வழக்கில் தனிநபர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண் 779/2 பி மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் 50 சென்ட் ஆகும். அதற்கான பட்டா கருப்புஉடையார் பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். தற்போதுவரை எந்த மாற்றமும் இன்றி கருப்பு உடையார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 779/2 பி சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண் 780/4 பி, 708/1 சி யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நாச்சப்ப உடையார், நல்லம்மாள் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் உள்ள நிலங்களில் இருப்பது பொதுவான பாதை என்றால் சரிதான். மேற்படி பாதை வழியாகத்தான் பொதுமக்கள் அனைவரும் சென்று வருகின்றனர் என்றால் சரிதான். மேற்படி பொது பாதையில் விளம்புகை பரிகாரம் கேட்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2) தாவா பி அயிட்ட சொத்தில் நான் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தில் உள்ள பொதுப்பாதையை நான் பயன்படுத்துவதை யார் தடை செய்துள்ளார் என்றால் நாச்சப்ப உடையார் மற்றும் மேற்படி நிலத்தின் பட்டாதாரர்கள் தடைசெய்கிறார்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா பி அயிட்ட சொத்தில் உள்ள பொதுப்பாதையை பயன்படுத்த ஏதேனும் தடை செய்தார்களா என்றால் இல்லை. தாவா பி அயிட்ட சொத்தில் உள்ள பாதையானது பட்டாதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என்னிடம் பிரச்சினை செய்த நபர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் 1 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளை அவசியமற்ற முறையில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்பந்தப்படாதது என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காத இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1முதல் 4 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**